பெரியாழ்வார் அருளிச் செய்த
பெரியாழ்வார் திருமொழி
ஐந்தாம் பத்து

நாலாம் திருமொழி - சென்னியோங்கு

எம்பெருமான் தமது திருவுள்ளத்தில் புகுந்தமையால் ஆழ்வார் தாம் பெற்ற நன்மைகளைக் கூறி உகத்தல்

** சென்னியோங்கு * தண்திருவேங்கடம் உடையாய்! * உலகு
தன்னை வாழ நின்ற நம்பீ! * தாமோதரா! சதிரா! **
என்னையும் என் உடைமையையும் * உன் சக்கரப் பொறி ஒற்றிக் கொண்டு *
நின் அருளே புரிந்திருந்தேன் * இனி என் திருக்குறிப்பே? 1

பறவை ஏறு பரம்புருடா! * நீ என்னைக் கைக்கொண்ட பின் *
பிறவி என்னும் கடலும் வற்றிப் * பெரும் பதம் ஆகின்றதால் **
இறவு செய்யும் பாவக்காடு * தீக்கொளீஇ வேகின்றதால் *
அறிவை என்னும் அமுத ஆறு * தலைப்பற்றி வாய்க்கொண்டதே 2

எம்மனா! என் குல தெய்வமே! * என்னுடை நாயகனே! *
நின்னுளேனாய்ப் பெற்ற நன்மை * இவ்வுலகினில் ஆர் பெறுவார்? **
நம்மன் போலே வீழ்த்தமுக்கும் * நாட்டில் உள்ள பாவம் எல்லாம் *
சும்மெனாதே கைவிட்டோடித் * தூறுகள் பாய்ந்தனவே 3

கடல் கடைந்தமுதம் கொண்டு * கலசத்தை நிறைத்தாப் போல் *
உடல் உருகி வாய் திறந்து * மடுத்துன்னை நிறைத்துக் கொண்டேன் **
கொடுமை செய்யும் கூற்றமும் * என் கோல் ஆடி குறுகப் பெறா *
தடவரைத் தோள் சக்கரபாணீ! * சார்ங்கவிற் சேவகனே! 4

பொன்னைக் கொண்டு உரைகல் மீதே * நிறம் எழ உரைத்தாற் போல் *
உன்னைக் கொண்டு என் நாவகம் பால் * மாற்றின்றி உரைத்துக் கொண்டேன் **
உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன் * என்னையும் உன்னில் இட்டேன் *
என் அப்பா! என் இருடீகேசா! * என் உயிர்க் காவலனே! 5

உன்னுடைய விக்கிரமம் * ஒன்றொழியாமல் எல்லாம் *
என்னுடைய நெஞ்சகம் பால் * சுவர் வழி எழுதிக் கொண்டேன் **
மன்னடங்க மழு வலங்கைக் கொண்ட * இராம நம்பீ! *
என்னிடை வந்தெம்பெருமான்! * இனி எங்குப் போகின்றதே? 6

** பருப்பதத்துக் கயல் பொறித்த * பாண்டியர் குலபதி போல் *
திருப்பொலிந்த சேவடி * என் சென்னியின் மேல் பொறித்தாய் **
மருப்பொசித்தாய்! மல்லடர்த்தாய்! * என்றென்றுன் வாசகமே *
உருப்பொலிந்த நாவினேனை * உனக்கு உரித்தாக்கினையே 7

அனந்தன் பாலும் கருடன் பாலும் * ஐது நொய்தாக வைத்து * என்
மனந்தனுள்ளே வந்து வைகி * வாழச் செய்தாய் எம்பிரான்! **
நினைந்து என்னுள்ளே நின்று நெக்குக் * கண்கள் அசும்பொழுக *
நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன் * நேமி நெடியவனே! 8

பனிக்கடலில் பள்ளிகோளைப் * பழக விட்டோடி வந்து * என்
மனக்கடலில் வாழ வல்ல * மாய மணாள நம்பீ! **
தனிக் கடலே தனிச் சுடரே * தனி உலகே என்றென்று *
உனக்கிடமாய் இருக்க * என்னை உனக்கு உரித்தாக்கினையே 9

** தடவரை வாய் மிளிர்ந்து மின்னும் * தவள நெடுங்கொடிப் போல் *
சுடர் ஒளியாய் நெஞ்சின் உள்ளே * தோன்றும் என் சோதி நம்பீ! **
வடதடமும் வைகுந்தமும் * மதிள் துவராபதியும் *
இடவகைகள் இகழ்ந்திட்டு * என்பால் இடவகை கொண்டனையே 10

** வேயர் தங்கள் குலத்துதித்த * விட்டுசித்தன் மனத்தே *
கோயில் கொண்ட கோவலனைக் * கொழுங்குளிர் முகில்வண்ணனை **
ஆயர் ஏற்றை அமரர் கோவை * அந்தணர் தம் அமுதத்தினை *
சாயை போலப் பாட வல்லார் தாமும் * அணுக்கர்களே 11

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்